


Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 362

சனிக்கிழமை
23 நவம்பர் 2024

வள்ளுவர் ஆண்டு 2055



### பூநகரி, மன்னாரில் உள்ள

# அதானியின் காற்றாலை அநுர அரசு மீள்பரிசீலனை

### அமெரிக்கப் பிடியாணையைத் தொடர்ந்து நடவடிக்கைகளை இறுக்குவதற்கு முடிவு



**கொழும்பு, நவம்பர் 23**

**பூநகரி மற்றும் மன்னார் பகுதிகளில் உள்ள அதானியின் காற்றாலைகள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்தவும், பரிசீலனைகளில் ஈடுபடவும் அநுர அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.**

11

## டெங்குக்கு ஏதுநிலை; தண்டமாக ரூ.195,000

யாழ்ப்பாணம், நவ. 23

பருத்தித்துறைப் பகுதியில், டெங்குக்கு ஏதுநிலையுடன் காணிகள் மற்றும் சுற்றுப் புறங்களை வைத்திருந்த உரிமையாளர்களுக்கு ஒரு லட்சத்து 95 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷாலும்,

11

## விபத்தில் குடும்பஸ்தர் இறப்பு; பெண் மருத்துவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ. 23

வட்டுக்கோட்டையில் கடந்த மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில், காயமடைந்த குடும்பத் தலைவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, விபத்துடன் தொடர்புடைய காரைச் செலுத்திவந்த பெண் மருத்துவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

11

### யாழ்ப்பாணத்தில்

## வெள்ளப் பேரிடர் காரணமாக 1,492 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாகப்பெய்துவரும்மழை காரணமாக ஆயிரத்து 492 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 591 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 21 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இதன்படி, சாவகச்சேரி பிரதேச செயலர்

11

## பிரதேச செயலர்கள் சிலருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பிரதேச செயலர்கள் சிலருக்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இதுவரை காலமும் கோப்பாய் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய சிவசிறீ முல்லைத்தீவு

11

## மாவீரர்கள் நினைவாலயம் நல்லூரில் இன்று திறப்பு!

யாழ்ப்பாணம், நவ. 23

1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி முதல், 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தாயக

11

## 300 பவுண் திருடியவன் பொலிஸுக்கு டிமிக்கி!

### ஒரு வருடமாக முயற்சித்தும் முடியவில்லை பொலிஸாரால்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த ஒரு வருடமாக 300க்கும் மேற்பட்ட பவுண் நகைகளை திருடியவனைப் பிடிக்க முடியாமல் பொலிஸார் தொடர்ந்து திணறி வருகின்றனர்.

11

## இந்தியாவிலிருந்து விரைவில் 70,000 தொன் அரிசி

கொழும்பு, நவ. 23

இந்தியாவிலிருந்து முதற்கட்டமாக 70 ஆயிரம் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளது என்று விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

பண்டிகைக் காலத்தில் நாட்டில் எந்தவொரு உணவுப் பொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்படாது. 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரிசி தட்டுப்

11

### சுகாதாரக் குறைபாடு

## ரூ. 40,000 தண்டம்

யாழ்ப்பாணம், நவ. 23

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பல்பொருள் அங்காடி மற்றும் உணவகம் என்பனவற்றுக்கு எதிராக 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

11

## ரூ.7 கோடியை திருடியோர் யாழ்ப்பாணத்தில் பதுங்கல்

### கைதுசெய்ய உதவுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

மினுவாங்கொட பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் 7 கோடி ரூபா பெறுமதியான பணம் திருடப்பட்ட நிலையில், சந்தேக நபர்கள் இருவர் யாழ்ப்பாணத்தில் பதுங்கியிருப்பதாக புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி மினுவாங்கொட பகுதியில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. அவர்கள்

11

## தேநீர் அருந்தியவர் மயங்கி வீழ்ந்து பலி

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த இளம் குடும்பத்தலைவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களின் தேவைகளை உடன் நிறைவேற்றவேண்டும்



### அரச அலுவலர்களுக்கு ஆளுநர் பணிப்பு

**யாழ்ப்பாணம், நவ.23**

**அரச அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக்கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதைச் செய்து முடிப்பதே அரச அதிகாரிகளின் கடமை என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் துறை சார் மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அலுவலர்கள் பொதுமக்களை தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கும் வகையில் செயற்படக்கூடாது. அரச அலுவலகங்களை நாடிவரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக் கொடுக்கமுடியுமோ அவ்வாறு செய்து முடிக்க வேண்டும்.

விவசாயிகளின் நீண்டகாலப் பிரச்சினையான அவர்களின் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பு மற்றும் 10 சதவீதக் கழிவு தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும். அத்துடன் சந்தைகளில் பின்பற்றப்படும் கழிவு நடைமுறை தொடர்பாகவும் அவதானம் செலுத்தவேண்டும்.

உள்ளூராட்சி அமைச்சின் கீழான வீடமைப்புத் திட்டத்தில், மீளக்குடியமரும் மக்கள், இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் மக்கள், விதவைகளுக்கே முன்னுரிமையளிக்க வேண்டும் - என்றார்.

ஆளணிப்பற்றாக்குறை தொடர்பில் திணைக்களத் தலைவர்களால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. வடக்கு மாகாணத்தில் 17, 138 குடும்பங்களுக்கு காணி இல்லாத நிலைமை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு, உள்ளூராட்சி மன்றங்களின் மதிப்பீட்டாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் 75 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காணி இல்லாத நிலைமையை பூச்சியமாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (ச-125 ,27, 159)

## கட்சியை நிமிர்த்துவதற்கு மஹிந்த பிரயத்தனம்!

கொழும்பு, நவ.23

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி பின்னர் பிரிந்து சென்ற பிரிவினரை மீண்டும் ஒன்றிணைப்பதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களை மீண்டும் இணைத்துக்கொள்வதே இதன் நோக்கம் எனக் கூறப்படுகிறது. இதன் மூலம் சரிந்த கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப மஹிந்த ராஜபக்ச செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஹிருணிகாவுக்கு தேசியப்பட்டியல்?

கொழும்பு, நவ.23

ஐக்கிய மக்கள் சக்திக்காக கடுமையாக உழைத்த எரான் விக்கிரமரத்ன, ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகியோர் குறைந்த எண்ணிக்கையிலான வாக்குகளினாலேயே தோல்வியடைந்தார்கள். எனவே இவர்களுக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெற்றுக்கொடுக்க முயற்சிக்கிறோம் என அந்தக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி.யான ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## சதொச நிறுவனத்தில் அரிசிக்குக் கட்டுப்பாடு

கொழும்பு, நவ.23

நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாடு காரணமாக இலங்கை சதொச நிறுவனம் அரிசிக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அதன்படி, சதொச ஒரு வாடிக்கையாளருக்கு பத்து கிலோ நாட்டரிசி மற்றும் கெக்குலு அரிசியை மட்டுமே வழங்குகின்றது.

அரசாங்கத்தினால் அண்மையில் அரிசி வகைகளுக்குக் கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டது. இதன்படி சம்பா மற்றும் நாட்டரிசி கிலோ 90 ரூபாவாகவும், கெக்குலு அரிசி கிலோ 85 ரூபாவாகவும், கீரிச் சம்பா கிலோ 125 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

இந்தநிலையில் இந்த விலைக்கு அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியை விற்பனை செய்ய முன்வராதபடியால் சந்தையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஐ.ம.சக்தியின் தலைமையில் மாற்றமில்லை

கொழும்பு, நவ.23

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியில் மாற்றம் மேற்கொள்ளப்படமாட்டாது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியில் இருந்து சஜித் பிரேமதாஸவை நீக்கிவிட்டு, அந்தப் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன தலைமைப்பதவி மாற்றம் தொடர்பில் கட்சிக்குள் எவ்வித கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. எதிரணியை சீர்குலைக்கும் வகையில் இந்தத் தகவல் பரப்பப்பட்டுவருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## டெங்கு அவதானம்



கொழும்பு, நவ.23

தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக, எதிர்காலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக மக்கள் வைத்திருக்கவேண்டுமெனவும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக சுகாதார மருத்துவ நிபுணர் மருத்துவர் அனோஜா தீரசிங்க தெரிவித்தார்.

அதேவேளை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (ச)

# நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படாது; மாற்றப்படும்

### ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, நவ.23

நாட்டில் பிரதான சில மாற்றங்களை ஏற்படுத்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தேவைப்படுகின்றது. எனவே, அடுத்த ஆண்டு அந்த முறைமை நீக்கப்படமாட்டாது. ஆனால் நிச்சயம் மாற்றப்படும் என்று ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்ற உறுதிமொழி தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் நிறைவேற்றப்படும். அத்துடன் புதிய அரசமைப்பு இயற்றப்படும்.

நாட்டில் பிரதான சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தேவைப்படுகின்றது. எனவே, அடுத்த ஆண்டு அந்த முறைமை நீக்கப்படமாட்டாது.

ஆனால் நிச்சயம் மாற்றப்படும். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கிரிக்கெட் அணியில் யாழ்.மாவட்ட இளம் வீரர்கள்!



யாழ்ப்பாணம், நவ.23

**யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று இளம் கிரிக்கெட் வீரர்கள் இலங்கையின் தேசிய கனிஷ்ட கிரிக்கெட் அணிகளில் இணைக்கப் பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இடதுகை வேகப்பந்துவீச்சாளரான ரஞ்சித் குமார் நியூட்டன் மற்றும் மாலிங்க பாணியில் பந்து வீசும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரரான குகதாஸ் மாதுளன் ஆகிய இரண்டு வீரர்களும் இலங்கை 19 வயதின் கீழ் கிரிக்கெட் அணிக்காகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் இந்த இரண்டு வீரர்களும் இலங்கை இளையோர் ஆசியக் கிண்ணத் தொடரில் பிரதிநிதித்துவம் செய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்.ஹாட்லிக் கல்லூரியின் சுழல்பந்து வீச்சாளரான விக்னேஸ்வரன் ஆகாஷ் இலங்கையின் 17 வயதின் கீழ் கிரிக்கெட் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் பங்களாதேஷ் 17 வயதின் கீழ் கிரிக்கெட் அணிக்கு எதிராக நடைபெறவிருக்கும் தொடர்களிலும் ஆகாஷ் பங்கேற்கவுள்ளார்.

அதேவேளை, குறித்த வீரர்கள் மூவரும் மாகாண அணிகளுக்கான தொடரில் தம்புள்ள அணியினைப் பிரதிநிதித்துவம் செய்து தங்களது திறமைகளை வெளிக்காட்டியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-66-33)

## கடமையை ஏற்காவிடின் பதவி வெறிதாக்கல்

யாழ்ப்பாணம், நவ.23

நெடுந்தீவு பிரதேச செயலராக சங்கானை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி கிருஷ்ணவதனா செந்தூரன் நியமனம் பெற்றிருந்த நிலையில் அவர் தொடர்ந்தும் சேவைக்குத் திரும்பவில்லை. அதனால் அவரின் பதவியை வெறிதாக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார். குறித்த நியமனக் கடிதம் யாழ். மாவட்டச் செயலரால் கடந்த ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி வழங்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச- ரி-125)

## பிள்ளையான் மீள சி.ஐ.டி.யில்

பிள்ளையான் எனப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இரண்டாவது நாளாகவும் நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் சனல்- 4 தொலைக்காட்சி தயாரித்த விசேட காணொலித் தொகுப்பு தொடர்பாக விளக்கமளிப்பதற்காகவே அவர் இரண்டாவது நாளாகவும் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## விஞ்ஞான ஆலோசகராக பேராசிரியர் கோமிகா

கொழும்பு, நவ,23

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக அமெரிக்க ஹுஸ்டன் பல்கலைக்கழகம் மற்றும் எம்.டி எண்டர்சன் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் கோமிகா உடுகமசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமனக் கடிதம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் பேராசிரியர் கோமிகா உடுகமசூரியவிடம் வழங்கி வைக்கப்பட்டது. (ச-இ)

## விலங்குகளால் சேதம்; தீர்வு காண்பதற்கு குழு

கொழும்பு, நவ.23

பயிர்களுக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்தும் தீங்கு விளைவிக்கும் விலங்குகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண விவசாயம், கால்நடைகள், நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, சிறப்புப் பிரிவை நிறுவியுள்ளது. இந்த முயற்சியானது நிலையான கட்டுப்பாட்டுக்கான பல உத்திகளைச் செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தொடர்பான விசேட கலந்துரையாடல் விவசாய அமைச்சர் கே.டி.லால் காந்த தலைமையில் இடம்பெற்றது. (ச-இ)

## ‘ஏ.ஐ.’ தொழில்நுட்பத்தால் மாணவிகளுக்கு அச்சுறுத்தல்

இலங்கையில் பாடசாலை மாணவிகளின் புகைப்படங்களை ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிர்வாணப் புகைப்படங்களாக வடிவமைத்து மோசடியில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனவே மாணவிகள் எச்சரிக்கையாக இருக்குமாறு கணினி அவசர நடவடிக்கைப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக இந்த மோசடிக் கும்பல் சமூக ஊடகங்களில் காணப்படும் பாடசாலை மாணவிகளின் புகைப்படங்களை ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிர்வாணப் புகைப்படங்களாக மாற்றி, உரிய மாணவிகளிடம் அந்தப் புகைப்படங்களைப் பகிர்ந்து சமூக ஊடகங்களில் பதிவிடுவோம் என அச்சுறுத்தி பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## தினம் தெரியுமோ?

**காற்றுள்ள போதே தூற்றிக்கொள் எண்டு எங்கட ஆக்கள் சொன்னாலும் சொல்லிச்சினம், இப்ப நெல்லுத் தூத்தப் போனால் அதைமுழுக்க காத்து அள்ளிக்கொண்டு போட்டுதெண்டு கம்பிகட்டுற கதையளை மில்காரர் சொல்லத் தொடங்கிட்டினம். யாழ்ப்பாணம் ரவுணுக்குள்ள இருக்கிற மில்லில நெல்லுக் குத்துறதுக்கு ஒராள் போயிருக்கிறார். ஏற்கனவே அரிசி ஆனைவிலை, குதிரை விலை போகுது. அதால சனங்கள் இப்ப கடையில அரிசி வாங்கிறதைக் குறைச்சு, வீடுகளில இருக்கிற நெல்லைக் குத்தி அரிசியாக்கித்தான் சமாளிக்கினம். அப்பிடித்தான் இவரும் வீட்டில இருந்த 11 கிலோ நெல்லை உடைச்சு அரிசியாக்கிக் கொண்டு வருவமெண்டு போய், நெல்லை நிறுத்துப்போட்டு, அதுக்குரிய காசையும் குடுத்திருக்கிறார்.**

**காசை வாங்கிப்போட்டு மில்காரர், கனக்க வேலையள் இருக்கு. ஒரு மணித்தியாலத்தால வந்தால் எடுக்கலாம் எண்டு சொல்லியிருக்கிறார். நெல்லைக் குடுத்தவரும் வெளிவேலையளைப் பார்த்திட்டு ஒரு மணித்தியாலத்தால அரிசியை எடுக்கவந்து. உரப்பையைத் தூக்கினால் அது காத்துமாதிரி இருந்திருக்குது. நெல்லைக் குடுத்தவருக்கு ஒரு டவுட் வர, உடனேயே அரிசியை நிறுத்துப்பார்த்திருக்கிறார். வெறும் அஞ்சரைக் கிலோ அரிசி தான் இருந்திருக்குது. வழக்கமா நெல்லைக் குடுத்தால் உமி, தவிடு எண்டு ஆகக்கூடினது மூண்டிலொரு பங்குதான் கழிவு போகும். இதென்னெண்டா சரிக்கரைவாசி கழிவாப் போயிருக்குது. உடனேயே ‘என்னண்ணை, நான் தந்த நெல்லின்ர அரைவாசி தான் அரிசியா வந்திருக்கு. அப்பிடி வராதே. இது நான் தந்த நெல்லுத்தானோ? இல்லாட்டி வேற ஆரும் தந்ததை மாறி என்ர எண்டு தந்திட்டிங்களோ? எண்டு அவர் கேட்டிருக்கிறார். அதுக்கு மில்காரர் ‘இல்லையண்ணை, இது உங்கடைதான் , இவ்வளவுதான் வந்தது. அதுக்கு நானென்ன செய்ய ஏலும்? எண்டு சொல்ல, நெல்லுக்காரரும் விடாமல் கதைக்க ஒரே வாக்குவாதமாப் போட்டுது. கடைசியா மில்காரர் விசயம் சிக்கலாகக் கூடாது எண்டிட்டு ‘அப்ப மிச்சத்துக்கு எவ்வளவு காசெண்டு சொல்லுங்கோ தாறன்’ எண்டிருக்கிறார்.**

**அதுக்கு நெல்லுக்குடுத்தவர் ‘காசு முக்கியமில்லை அண்ணை, உங்களை நம்பித்தான் இப்பிடி நெல்லைத் தந்திட்டு போட்டுவாறம். அந்த நம்பிக்கையை நீங்கள் காப்பாத்தவேணும். இனியாவது இப்பிடி மற்றவையின்ர நெல்லு, அரிசியை சரியா குடுங்கோ’ எண்டு சொல்லிப்போட்டு அப்பிடியே வந்து நடந்ததை பட்சியிட்ட ஒப்புவிச்சார்.**

**பனையால விழுந்தவையை மாடேறி உழக்கின மாதிரி, இப்ப அரிசிப்பஞ்சத்தில இருக்கிற சனங்களை இப்பிடி மில்காரரும் சுரண்டினால் அதுகள் என்ன தான் செய்யும்? இப்பிடி சனம் மில்லுக்கு குடுக்கிற நெல்லு, அரிசி எண்டதுகளில கைவைக்கிறவைக்கு முறையான பாடம் படிப்பிக்க உரியவை முன்வர வேணும். இல்லாட்டி அவை காத்தில்லாட்டியும் தூத்திக்கொண்டும், ஏமாத்திக்கொண்டும் இருப்பினம் கண்டியளோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிவேண்டி சிறப்புப் பூசை

யாழ்ப்பாணம், நவ. 23
நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆசிவேண்டி சிறப்புப் பூசை வழிபாடுகள் ஈவினை மதுரையம்பதி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தையும் பூசையில் வைத்துப் பெற்றுக்கொள்ள முடியுமென ஆலயப் பிரதமகுரு து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-45-66)



## கீரைச்செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
வலி. கிழக்கு பிரதேசத்தில் பெய்த மழையால் நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், உரும்பிராய், ஊரெழு, ஆகிய இடங்களில் கீரைப் பயிர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதால் அவற்றின் விலை அதிகரிக்கலாம் என செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ரி-17)

வடக்கு பண்பாட்டு ஆலோசனைக் குழு

## புதிய தலைவராக தமிழருவி சிவகுமாரன்

யாழ்ப்பாணம், நவ. 23
வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டு ஆலோசனைக் குழுவின் புதிய தலைவராகத் தமிழ்ப் புலமையாளர் தமிழருவி த.சிவகுமாரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகத்தில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற பண்பாட்டு ஆலோசனைக் குழுக் கூட்டத்திலே அவர் தெரிவு செய்யப்பட்டார்.
குறித்த பதவிக்கு தமிழருவி சிவகுமாரனின் பெயரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் முன்மொழிய கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் வழிமொழிந்தார். அதனையடுத்து சபையின் ஏகமனதாக தமிழருவி சிவகுமாரன் தெரிவுசெய்யப்பட்டார். (ச-22,66-9)



## மதிப்பளிப்பும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், நவ. 23
பளை, சோரன்பற்று கணேசா வித்தியாலய ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் சாதனையாளர்கள் மதிப்பளிக்கும் நிகழ்வும், பரிசளிப்பு நிகழ்வும் வித்தியாலய சமூகத்தால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்டது.
வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் கலந்துகொண்டார். (ரி-9)

## நாவலர் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், நவ. 23
சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு நாவலர் நினைவரங்கம் நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்துமன்றத்தின் ஏற்பாட்டில் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கலாசாலை வளாக நாவலர் திருவுருவச்சிலை முன்றலில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நாவலர் திருவுருவச்சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள் நாவலரின் வெவ்வேறு பணிகளை முன்னிலைப்படுத்தி உரையாற்றினர். (ரி-66)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், நவ. 23
வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி வகை- 3 பாடசாலைகளான யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, யாழ். போக்கட்டி அ.த.க. பாடசாலை போன்றவற்றுக்கான அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் பதிவுத் தபாலில் 'வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, ஹென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.
கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அதிபர் பதவிக்கான விண்ணப்பம் 2024' எனக் குறிப்பிடவேண்டும். இதற்கான நிபந்தனைகளாக விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல், இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு - 3ஐ உடையவர்களாக இருத்தல் வேண்டும், மாகாணக் கல்வி அமைச்சின் 'அதிபர் வெற்றிடம் நிரப்புதல்' சுற்று நிருப இல 2023/3, 2023 /03ஏ இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-45-10)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** அரசாங்கக் காரியங்கள் சற்று தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். வாழ்க்கைத்துணை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். தந்தை வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம் :** மனதில் இனம் தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கிய முடிவுகளை பிற்பகலுக்கு மேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். பிற்பகலுக்கு மேல் தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத் துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு பணியின் காரணமாக பயணம் மேற் கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** சகோதரர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் பணவரவுக்கும் வாய்ப்புண்டு. பிள்ளைகள் வழியில் எதிர் பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடு வதையும் தவிர்ப்பது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஜெனிவாவும் சில நகர்வுகளும்

சத்தம் சந்தடியில்லாமல் தமிழர்களுக்கு ஒரு ஆப்பைச் செருகிவிட்டு, அமைதியாக இருக்கிறது அநுர அரசாங்கம். வேறொன்றுமில்லை, வெளி விவகார பிரதியமைச்சராக திருகோணமலையைச் சேர்ந்த அருண் ஹேமச்சந்திராவை நியமித்தமை தான் அந்த ஆப்பு. இந்த ஆப்பு வெளிப்பார்வைக்கு உடனே புலப்படாது. மாறாக தமிழர் ஒருவருக்கு, அதுவும் 35 வயதேயானவருக்கு, தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோய்க்கொண்டிருக்கும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவருக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்த பிரதியமைச்சை அநுர கொடுத்துவிட்டாரே என்று புதிய அரசாங்கத்தின் மீது தமிழர்களுக்கு ஒரு பிடிப்பு ஏற்படலாம். ஆனால் இப்படியொரு முக்கியமான பிரதியமைச்சை, அநுர அரசாங்கம் அருணுக்கு கொடுத்ததில் மிகப்பெரிய இராஜதந்திரம் ஒளிந்திருக்கிறது.

வெளிவிவகார அமைச்சரான விஜித ஹேரத், அயல் நாடுகளுடனான உறவைப் பேணவும், பொருளாதார முதலீடுகளைக் கொண்டுவரவும் பம்பரம் போல சுற்றிச் சுழன்றடிக்க வேண்டியிருக்கும். இதனால் அவரால் நேரடியாகப் பங்குபற்ற முடியாத நிகழ்வுகளுக்கு அருண் ஹேமச்சந்திராவே 'உடையார் வீட்டுப் பொல்லு' போன்று முகம் காட்டி விட்டு வரவேண்டியிருக்கும். அப்படி விஜித ஹேரத்தின் பிரதிநிதியாக அருண் செல்லவேண்டிய அமர்வுகளில், ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வும் ஒன்று. அங்கு இறுதிப்போரில் இலங்கைப் படைகள் புரிந்த வெறியாட்டத்துக்கும், இனப்படு கொலைக்கும் இப்போதைய அரசாங்கமும் பொறுப்புக்கூறவேண்டும். 'போர் நடந்தபோது நாங்கள் ஆட்சியில் இல்லை' என்று இந்த விடயத்தை அவ்வளவு லேசாகத் தட்டிவிட்டுச் செல்ல முடியாது. இந்தநிலையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலை தொடர்பில் அரசாங் கத்தின் சார்பில் தமிழ் அமைச்சர் ஒருவர் கலந்து கொண்டு ' இப்போது எங்கள் இனத்தின் மீது எந்த ஒடுக்குமுறைகளும் இல்லை. அதற்கு நானே சாட்சி. ஒரு தமிழரான என்னைப் பிரதியமைச்சராக்கி இருக்கின்றனர். எனவே அரசாங்கம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதோடு, பொறுப்புக் கூறலையும் மிகச் சரியாகப் பேணுவதால், ஜெனிவாவில் இனியும் இலங்கைமீது போர்க்குற்றம் அது இதுவென்று அழுத்தங்கள் தராமல் இருந்தாலே நம் நாடு ஒற்றுமையாக இருக்கும்' என்று சொன்னால், அவரின் வார்த்தைகளுக்கு இருக்கும் பெறுமதி வேறுதான். 'அவன் ஆயுதத்தை எடுத்து அவனையே போட்டுத்தள்ளுவது' என்பது இதைத்தான்.

ஒரு தமிழரான அருண், தமிழினப்படுகொலை நிகழவில்லை என்று ஜெனிவாவில் சொன்னால், அவரது குரல் அம்பலமேற, பாதிக்கப்பட்ட தமிழர்களின் குரல் நலிந்துபோய்விடும். சர்வதேச நாடுகளும், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையும் அருண் ஹேமச்சந்திராவின் குரலுக்கு செவிசாய்த்தால், அதன்பின்னர் தமிழர் தரப்பு என்னதான் மாய மந்திரங்கள் செய்தாலும், இறுதிப்போரில் நடந்த அநியாயங்களுக்கு நீதி கேட்கமுடியாத சூழல் உருவாகும். இலங்கை அரசாங்கங்களுக்கு மிக நீண்டகாலம் நெருக்கடியாக இருந்த ஜெனிவாப் பிரச்சினை நீர்த்துப் போய்விட்டால், அதுவே அவர்களுக்கு மிகப் பெரிய வெற்றிதான். அந்த வெற்றிக்கான நகர்வுகளாகவே அருண் ஹேமச்சந்திராவின் நியமனமும், வசாவிளான் வீதியின் ஒருபகுதி விடுவிப்பும், கற்கோவளம் படைமுகாம் அகற்றலும் இருக்கக்கூடும் என்பதே தமிழ் மக்களின் சந்தேகமாக இருக்கின்றது.




# எம்.பி.க்களுக்கு இனி சொகுசு வாகனம் 'கட்'

கொழும்பு, நவ.23

**அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எரிபொருள் சிக்கன வாகனம் வழங்கப்படும். பதவிக்காலம் முடியும்வரை அந்த வாகனத்தைப் பயன்படுத்தி மக்கள் சேவையை மேற்கொள்ளமுடியும் என பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்கள் வழங்கப்படாது.

மக்களின் வரிப்பணம் விரயமாவதை குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால அரசாங்கங்களில் அமைச்சுகளின் செயலாளர்கள் முதல் அமைச்சர்கள்வரை அதிசொகுசு வாகனங்கள் வழங்கப்பட்டதுடன், பெருந்தொகை மக்களின் வரிப்பணம் செல விட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சிங்கப்பூர்- இலங்கை நேரடி விமானசேவை

கொழும்பு, நவ.23

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான நேரடி புதிய விமான சேவை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த விமான சேவையை சிங்கப்பூரை தளமாகக் கொண்ட குறைந்த கட்டண ஜெட்ஸ்டார் ஏசியா விமான நிறுவனம் ஆரம்பித்துள்ளது. ஒவ்வொரு வாரமும் காலை அல்லது மாலையில் சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு 5 விமானங்கள் இயக்கப்படும் என்றும் சிங்கப்பூர் வழியாக இணைபவர்களுக்கு தேவையான தெரிவுகளையும் வழங்குகிறது என ஜெட்ஸ்டார் தெரிவித்துள்ளது. (ச-இ)

# முஸ்லிம் காங்கிரஸ் தேசியப்பட்டியலுக்கு எம்.எஸ். நளீம்

கொழும்பு, நவ.23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு எம்.எஸ். நளீமின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

நீண்ட கலந்தாலோசனைகளின் பின்னர் நளீமின் பெயரை தேசியப் பட்டியல் உறுப்புரிமைக்காக கட்சி பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# பரீட்சை இடர் அழைக்கவும்

கொழும்பு, நவ.23

நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சை காலத்தில் காலநிலை காரணமாக ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக 117 என்ற அனர்த்த முகாமைத்துவ அவசர தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது பரீட்சைத்திணைக்கள அவசர தொலைபேசி இலக்கமான 1911 உடனோ தொடர்பு கொள்ளலாம் என்று பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-6)

# லொஹான் மனைவிக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, நவ.23

சட்டவிரோதமான முறையில் கார் ஒன்றை பயன்படுத்திய சம்பவம் தொடர்பில்விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேவின்மனைவி ஷஷி பிரபா ரத்வத்தே எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

நுகேகொட நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நாளை

24.11.2024

ஞாயிற்றுக்கிழமை - கார்த்திகை - 09

சுபநேரம் : 09.11 - 10.41
ராகுகாலம் : 04.41 - 06.11

## நாளொரு நல்வார்த்தை

பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது. பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது. வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்?
மாசடையாச் சூழல் சாவடையா நிழல்

- கவிஞர் புதுவை இரத்தினதுரை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லைதாண்டிய மீன்பிடி

## கட்டுப்படுத்தக் கோரி ஜனாதிபதிக்குதபாலட்டை

முல்லைத்தீவு, நவ,23

முல்லைத்தீவு மாவட்ட சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தினரின் ஏற்பாட்டில், இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறலை உடனடியாக கட்டுப்படுத்தக் கோரி ஜனாதிபதிக்கு தபாலட்டை அனுப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்காலிக பேருந்து தரிப்பிடத்தில் சர்வதேச மீனவர் தினமான நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-25,35)





## வீடுகளுக்குள் வெள்ளம்; குருநகர் மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம், குருநகர் தொடர்மாடிக்கு அருகாமையில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததால் மக்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சுமார் 60 வீடுகளுக்குள் இவ்வாறு வெள்ளநீர் புகுந்துள்ளதால் அவர்கள் உறவினர்களது வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். (ச-27)



## விழிப்பூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ, 23

யாழ். நீரிழிவுக் கழகம் மற்றும் யாழ். போதனா மருத்துவமனை நீரிழிவுச் சிகிச்சை நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. யாழ். நீரிழிவுக் கழகச் செயலாளர் க. கணபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் ம. அரவிந்தன் நீரிழிவால் ஏற்படும் பாதிப்பு குறித்தும், அதைக் கட்டுப்படுத்துவது குறித்தும் விரிவுரையாற்றினார். (ச-25)



## நீரிழிவு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ.23

யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஆதரவுடன் நீரிழிவு விழிப்புணர்வு கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் நீரிழிவுச்சிறப்புமருத்துவநிபுணர்சிவமகாலிங்கம் அரவிந்தன் சிறப்புரையையும், கழகத்தின் செயலாளர் க.கணபதி நீரிழிவுக் கழகம் தொடர்பான அறிமுக உரையையும், கலாசாலையின் ஆரம்பப் பிரிவு ஆசிரிய மாணவி திருமதி ர.தேவமணி "நோயற்ற வாழ்வு" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினர். (ரி-66)

தென்மராட்சியில்

## காற்றுடனான மழையால் பல குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.23

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை பெய்த கடும் காற்றுடனான மழையால் தென்னைமரம் முறிந்து வீழ்ந்ததில் இரண்டு வீடுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

கொடிகாமம், தவசிக்குளம் மற்றும் மட்டுவில் சந்திரபுரம் ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. இந்த வீடுகளில் வசித்த நான்கு குடும்பங்களைச் சேர்ந்த ஐவர் வேறு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழையினால் நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டப் பகுதியைச் சேர்ந்த எட்டு வீடுகளுக்குள்ளும் கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் ஒரு வீட்டினுள்ளும் மழை வெள்ளம் புகுந்துள்ளது என கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். (ச-33-9)




## தென்மராட்சியில் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ,23

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் ஏற்பாட்டில் கண்காட்சி நிகழ்வு சாவகசேரி இந்துக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் இடம்பெற்ற கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.பத்மதாஸ் கலந்து சிறப்பித்திருந்தார். (ச-25-22-27-159-9)



## நூலக விழாவும் இதழ் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ.23

இணுவில் இந்துக் கல்லூரியின் நூலக அபிவிருத்திக் குழு நடத்திய நூலக விழாவும், இணுவை இந்துநாதம் இதழ் -8 வெளியீட்டு நிகழ்வும் அதிபர் வே.உதயமோகன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் இணுவை இந்துநாதம் இதழை அதிபர் வே.உதயமோகன் வெளியிட்டு வைக்கப் பிரதம விருந்தினர் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தேசியவாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ச-ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் கிரிக்கெட் வீரர்கள் நாடளாவிய ரீதியில் தேர்வு

கொழும்பு, நவ.23



©Chamara Senarath

இலங்கையில் உள்ள இளம் கிரிக்கெட் வீரர்களை அடையாளங்காணும் நோக்கில் இலங்கை கிரிக்கெட்டின் தேசிய பாதைத் திட்டத்தின் ஓர் அங்கமாக பிரீமா நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் இந்த ஆண்டுக்கான பிரீமா 15 வயதின் கீழ் இளையோர் கிரிக்கெட் லீக் தொடர் நேற்று 21ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் நாடுமுழுவதுமுள்ள ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட அதிசிறந்த 15 வயதின் கீழ் பாடசாலை வீரர்கள் 5 அணிகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

போட்டிகள் அனைத்தும் கொழும்பு பல்கலைக்கழக மைதானம், இலங்கை வர்த்தக சங்க மைதானம், கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி மைதானம் மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி மைதானம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு அணிகளும் தலா 4 போட்டிகளில் விளையாடவுள்ளதுடன், இதில் நான்கு இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் 28ஆம் திகதி நடைபெறவுள்ள அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறும். இதில் வெற்றியீட்டும் 2 அணிகளும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும். (ச-33)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பெறுகைகளுக்கான அறிவித்தல்
### வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை – 2025

தலைவர், கொள்வனவுக் குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். பிரதான வளாகம் மற்றும் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகங்களில் உள்ள வாகனங்களிற்கான வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவைகளுக்காக தகுதியான, தகைமை வாய்ந்த வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை நிறுவனங்களிடமிருந்து உறையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | விபரம் | வாகனங்களின் எண்ணிக்கை | வேண்டப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| UOJ/AD/MA-II/VS/J/2025 | வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு, யாழ்ப்பாணம் | 16 | 15, 000. 00 | 05.03.2025 |
| UOJ/AD/MA-II/VS/K/2025 | வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு, கிளிநொச்சி | 10 | 15, 000. 00 | 05.03.2025 |

**விலைக்கேள்விதாரர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் அவசியமானது**

1. மேற்படி சேவைகளுக்கான ஒரு தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.
2. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் கேள்விப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.
3. குறைந்தது மூன்று (03) வருடங்கள் அரச நிறுவனங்களுக்கு வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
4. முழுமையான கேள்வி விண்ணப்பத்தினை கொள்வனவு செய்வதற்கு மீள்செலுத்தப்படாத கட்டணமாக ரூபா 3.000.00 நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் 970000060000276 வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். அவர்களிடம் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ளலாம். (அலுவலக நாட்களில் 25.11.2024 தொடக்கம் 05.12..2024 வரை மு.ப 09.00 தொடக்கம் பி.ப 15.00 மணிவரை)
5. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூல/ பிரதி (Original/ Duplicate) ஆவணங்கள் என தனித்தனியே பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை –2025 " எனத் தலைப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக 06.12.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது கையளித்தல் வேண்டும்.

✣ கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் (Pre Bid Meeting)

| | | |
|---|---|---|
| திகதி: 29.11.2024 | நேரம்: 02:00pm | இடம்: பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

✣ ஏலத் திறப்பு (Bid Opening)

| | | |
|---|---|---|
| திகதி: 06.12.2024 | நேரம்: 02:00pm | இடம்: பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

**கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் மற்றும் ஏலம் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார்பிரதிநிதிகளில் ஒருவர் சமுகமளிக்கலாம்.**

தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடமிருந்து தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இலக்கம் 021 2226517, Fax:- 021 2226517 )

**தலைவர், பெறுகைக்குழு**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(CR/43749) J-1



## 34ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**கூட்டுறவாளர் அமரர்**
**சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள்
(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவியாணையாளர்,
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாசம்)

தோற்றம் 06.10.1927 — மறைவு 23.11.1990



சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் **அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள் மறைந்து இன்று 34 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

(cr.43737) (N-1)



## 34ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**கூட்டுறவாளர் அமரர்**
**சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள்
(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவியாணையாளர்,
ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாசம்)

தோற்றம் 06.10.1927 — மறைவு 23.11.1990



சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் **அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள் மறைந்து இன்று 34 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கோப்பாய் பிராந்தியம்**

CR 41084



## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### உத்.இல - 22, பருத்தித்துறை வீதி, வட்டாரம் - 01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01. பருத்தித்துறை வீதியிலுள்ள உத்.இல 22 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டில் இதுவரை காலமும் பதியப்படவில்லை.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை நாகர் சின்னத்தம்பி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு M.K.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 393/30.01.1941 ஆம் இலக்க உறுதியால் சின்னப்பொடி நாகரும். சின்னப்பொடி வைரமுத்துவும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

சின்னப்பு பொன்னம்பலம் ஆகியவர் குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் 10904/06.09.1964ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகர் சின்னத்தம்பி ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த சின்னப்பு பொன்னம்பலம் ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் மற்றொரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8965/02.09.1956ஆம் இலக்க உறுதியால் சடையர் நாகமுத்து சடையர் நாகமுத்து கைம்பெண் செல்லாச்சி ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த சின்னப்பு பொன்னம்பலம் காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரது பிள்ளைகளான பொன்னம்பலம் பாலகிருஸ்ணன். புவனேஸ்வரி பொன்னம்பலம் ஆகியவர்களுக்கு முதுசமாக சென்றடைந்தது.

அன்ரன் சந்திரகுமார் பிரான்சிஸ் ஆகியவர் மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு ப.திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1397/12.07.2022ஆம் இலக்க உறுதியால் குறித்த பொன்னம்பலம் பாலகிருஸ்ணனும். புவனேஸ்வரி பொன்னம்பலமும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த அன்ரன் சந்திரகுமார் பிரான்சிஸ் ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அன்ரன் சந்திரகுமார் பிரான்சிஸ் ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(CS/1906) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளில் இருபத்தொன்பது ஆண்டுகள்





அமரர்
**கனகசபை சண்முகசுந்தரம்** (சோமு)
(ஸ்தாபகர், சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)
தோற்றம்:- 03.11.1941

அமரர்
**சண்முகசுந்தரம் சிவரூபன்** (டீயூக்கோ)
(மாணவன் - யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)
தோற்றம்:- 18.08.1983

மறைவு
23.11.1995

இருபத்தொன்பது வருடங்கள் உருண்டோடி நீண்டாலும்
இருவரதும் உருவங்கள் எங்களுள் உலாவுவதை
பெருமையுடன் நீவிர் பொறுமையுடன் வாழ்ந்ததை
மறவாது மனத்தால் மௌனமாய் நினைக்கின்றோம்.

துர்க்கா இல்லம்,
இல.29, ஓட்டுமடம் வீதி,
ஓட்டுமடம், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/567211)4-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண் மகிழ
17 . 10 . 1953



மனம் நெகிழ
24 . 10 . 2024

அமரர் திருமதி **பிறேமகுமாரி கலைநாதன்** (பிறேமா ரீச்சர்)
(ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியை - புங்குடுதீவு - 1

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து
நல்வழிப்படுத்திய எங்கள் அன்புத் தாயே! ஆறவில்லை
உங்கள் பிரிவுத்துயரம்...
உங்கள் நினைவலைகள் உருவமாய் இல்லை என்றாலும்
தெய்வமாய் எங்களுடனே என்றென்றும் வாழ்வீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

98, 2/8 மனிங் பிளேஸ்,
வெள்ளவத்தை, கொழும்பு - 6

ஆழ்ந்த துயருடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை நடராஜா

(முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர்)



விழுவளை எழுதுமட்டுவாள்ளைப் பிறப்பிடமாகவும், உசனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நடராஜா அவர்கள் கடந்த (19.11.2024) செவ்வாய்க் கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ராசமணி தம்பதியரின் ஏகபுதல்வனும், காலஞ்சென்ற வர்களான பொன்னையா - மாரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயமலரின் அன்புக் கணவரும், விஜிதா (லண்டன்), பார்த்தீபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதன், கௌதமி ஆகியோரின் அன்பு மாமனாரும், மித்திரன், அரன், அநேகா ஆகியோரின் அன்புப் பேரனும், அன்னபாக்கியம், காலஞ்சென்ற சிவபூரணம், ராஜேஸ்வரி, மகேஸ்வரி, பராசத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது (உசன்) இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விழுவளை இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம்
07.04.1934

மறைவு
19.11.2024

தகவல்:
குடும்பத்தினர்.
077 893 5595
077 674 5594
உசன், மிருசுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவக் கவனயீனமே உயிர்களைப் பறிக்கிறது

## சட்டத்தரணி டெனிஸ்வரன் சுட்டிக்காட்டு

மன்னார், நவ.23

மருத்துவமனையை நம்பி வரும் மக்களுக்கு கவனயீனமாக மருத்துவ சேவை ஆற்றுவதாலேயே உயிர்கள் பறிபோகின்றன. இதனைக் கண்மூடித்தனமாக பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது என மாகாண சபை முன்னாள் அமைச்சரும், மன்னார் சிரேஷ்ட சட்டத்தரணியுமான பி.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாக கடந்த இரு தினங்களாக வனஜா என்ற இளம் தாயினதும், அவருக்குப் பிறந்த சிசுவினதும் மரணத்துக்கு நீதிகோரி கொட்டும் மழையிலும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த மரணம் தொடர்பாக மூன்று கோணத்தில் விசாரணைகள் நடைபெற்று வருவதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மூன்று தினங்களுக்குள் விசாரணைகள் முடிவுற்றதும் அதன் அறிக்கையில் எவ்வாறு தெரிவிக்கப்படுகின்றதோ அவை உடன் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, அரச மருத்துவமனையை நம்பி வரும், ஏழைமக்களுக்கு முறையாகச் சிகிச்சை அளிக்கவேண்டும் - என்றார். (ரி-60)









# திருநெல்வேலியில் அதிகூடிய மழை!

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றுக் காலை 8.30 மணி வரையான 24 மணிநேரத்தில் திருநெல்வேயிலிலேயே அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 152.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி திருநெல்வேலியில் பதிவாகியுள்ளது. குறித்த காலப்பகுதியில் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் 130.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டையில் 111.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 87.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 73.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நயினாதீவில் 46.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், பருத்தித்துறையில் 40.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 33.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 18.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் நேற்றுப் பலமணி நேரமாக மழைவீழ்ச்சி ஓய்வடைந்திருந்த நிலையில் இரவு 8.30 மணிக்குப் பின்னர் மீண்டும் பல இடங்களிலும் கனமழை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-66)




# நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டித் தாக்கம்

முல்லைத்தீவு, நவ.23

முல்லைத்தீவு மாவட்டத்தில் மடிச்சுக்கட்டி நோய் நெற்பயிர்களில் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கிருபவதனி சிவதீபன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நெற்பயிர்களில் 10 சதவிகிதம் இந்தத் தாக்கம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கேப்பாபிலவு, கள்ளியடி, வற்றாப்பளை,களிக்காடு, கோட்டைகட்டியகுளம் , ஐயன்குளம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் மடிச்சுக் கட்டித்தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் கபில நிறத் தத்தியின் தாக்கமும் அடையாளம் காணப்பட்ட நிலையில் அதன் தாக்கமும் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச- 125)

# போராட்டத்தின்போது சொத்துகள் சேதம்

## மன்னார் பொலிஸார் விசாரணை

மன்னார், நவ.23

மன்னாரில் இளம் தாயின் மரணத்துக்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்தில் பொதுச்சொத்துகளை சேதப்படுத்தி, வன்முறையைத் தூண்டியவர்களைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். மன்னார் பொது மருத்துவமனையில் இறந்த இளம் தாயின் மரணத்துக்கு நீதிகோரி கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாக இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் பொதுச் சொத்துகளைச் சேதப்படுத்தி வன்முறை தூண்டப்பட்டுள்ளது. அந்த வகையில் மருத்துவமனைக்குள் நுழைந்து கண்ணாடிகளைச் சேதமாக்கியவர்கள், பொலிஸார் மீது கற்கள் வீசியவர்கள், ரயர்கள் உள்ளிட்ட பொருள்களை வீதிகளில் எரித்து மக்களின் போராட்டத்தை திசை திருப்பியவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



திருமதி அமலேஸ்வரி தேவதாசன்

(ஆசிரியை - S.L.T.S - I)

**23.11.2024**

**சேவை விவரம்**

- யா/ அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலயம் - 21.03.1990 - 17.10.1990
- யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் - 18.10.1990 - 11.03.1994
- யா/ புனித மரியாள் வித்தியாலயம் - 12.03.1994 - 30.10.1997
- யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் - 01.11.1997 - 18.05.2010
- யா/ நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம் - 19.05.2010 - 23.11.2024

அகவை அறுபதில் மணிவிழா<br>
காணும் அமலேஸ்வரி எனும்<br>
நல்ஆசானே கற்பித்தல்<br>
யுகத்தில் மூன்று தசாப்தம்<br>
கடந்த உங்கள் சேவையால்<br>
நன் மாணாக்கர் பலரை<br>
உருவாக்கி அளப்பரும்<br>
பணி புரிந்து ஓய்வுபெறும்<br>
இந் நன்னாளில் சேவை நலன்பாராட்டி<br>
வாழ்த்துவதில் அக மகிழ்கின்றோம்.

*வாழ்த்துவோர்:* **பாடசாலைச் சமூகம்,**

**யா/ நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம்.**


# தோல்வியில் பாடம் கற்று மக்கள் பணியாற்றுவோம்

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, நவ.23

தேர்தல்களில்ஏற்பட்டபின்னடைவுகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்று வதற்குரிய அரசியல் பயணம் தொடரும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரே மதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மை மற்றும் யதார்த்தத்தைப் புரிந் துகொண்டு, மக்கள் ஆணையை ஏற்று, அவர்களின் அபிலாஷைகளை நிறை வேற்றுவதற்காக புதிய வழியில் எமது பயணம் கூட்டுப் பொறுப்புடன் தொடரும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்க ளில் சம்பிரதாயக் கட்சிகள் பின்ன டைவைச் சந்தித்துள்ளன. எனவே, பின்னடைவு, தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு முன் நோக்கிச் செல்வோம்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலப்பகுதிதான் ஆகின்றது. இக்காலப்பகுதிக்குள் முன்னேற்றமும் உள்ளது. பின்னடைவும் உள்ளது. பல வீனங்களை இனங்கண்டு சரியான திசையில் பயணிப்பதே இராஜதந்திரம். கொள்கை அடிப்படையில் மக்கள் மற்றும் நாட்டு நலனுக்காக இணைந்து பய ணிக்க முடியும்-என்றார். (ச-44)

# வெள்ளத்தால் பயிர் பாதிப்பு

*யாழ்ப்பாணம், நவ.23*

*யாழ். குடாநாட்டில் பெய்த கனமழையால் வயல்களில் வெள்ளம் ஏற்பட்டதால் தாழ்ந்த இடங்களிலுள்ள நெற்பயிர்கள் பாதிக்கப் பட்டன.*

*இந்தநிலையில் வெள்ளத்தை அகற்றும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ள னர். அதே வேளை பயிர்க ளின் அழிவால் மரக்கறிகளின் விலையும் உயர்ந்துள்ளது. (ரி-17)*

# அரச மருத்துவமனையில் போலி மருத்துவர் சிக்கினார்

கொழும்பு, நவ.23

மருத்துவர் போன்று வேடமணிந்து சுமார் இரண்டு வாரகாலமாக அரச மருத்துவ மனையில் ஒருவர் பணியாற்றியுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின் றது. இந்தச் சம்பவம் மாத்தளை மாவட்ட பொது மருத்துவமனையில் நடந்துள் ளது. தற்போது இந்த நபர் கைது செய் யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் இரத்தினபுரி, ரக்வானவைச் சேர்ந்த 27 வயதுடையவர் என்று பொலிஸார் கூறு கின்றனர்.

இந்த நபர் மருத்துவர் போன்று வேடம ணிந்து சுமார் இரண்டு வாரகாலம் மாத் தளை மாவட்ட மருத்துவமனையில் பணியாற்றியிருக்கின்றார்.

இவரது நடத்தையில் சந்தேகம் ஏற்பட் டதை அடுத்துச் சிலர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

அது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார், அந்த நபர் ஒரு போலி மருத் துவர் என்பதைக் கண்டறிந்து நேற் றுக் கைது செய் துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர். (எ-இ)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2025

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள். மீன் சந்தை. இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பன 2025ஆம் ஆண்டிற்கு (01.01.2025 - 31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 25.11.2024 – 02.12.2024 நண்பகல் 12.00 மணிவரை<br>
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 02.12.2024 பி.ப 02.00 மணிவரை<br>
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 02.12.2024 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி<br>
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர்** தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் **"தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கு எதிர்வரும் 02.12.2024 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **27,900.00** |
| 2 | அச்சுவேலி பொதுச்சந்தை | - | 1,000.00 | 200,000.00 | **9,868,500.00** |
| 3 | அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | **1,189,800.00** |
| 4 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | - | 1,000.00 | 10,000.00 | **229,500.00** |
| 5 | வளலாய் கோழி இறைச்சிக்கடை புதிய கட்டிடம் | 1,600.00 | 1,000.00 | 10,000.00 | **297,000.00** |
| | **புத்தூர் உப அலுவலகம்** (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடங்கள்) | | | | |
| 6 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 80,000.00 | **3,935,700.00** |
| 7 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | **963,000.00** |
| 8 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **59,400.00** |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 9 | கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 100,000.00 | **5,544,000.00** |
| 10 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | **514,800.00** |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 11 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 80,000.00 | **4,180,500.00** |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2024.10.26 ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**<br>
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**<br>
**2024.11.23**

(cr.43747) (N-1)



## நல்லூர் கந்தன் திருமணசேவை

ஆண் (V) 1981 செவ்வாய் உண்டு சமுர்த்தி உத்தியோகத்தர். இவருக்கு பொருத்தமான மணமகள் தேவை மற்றும் எல்லா இனம், மதம் சார்ந்த மணமக்கள் உண்டு.

தொடர்பு: வி.ஜெயந்தி

**077 973 3183**



## பேருந்து திருத்தத்திற்கான மூடிய கேள்வி கூறுவிலை கோரல்

வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான NP ND 7691 ஆம் இலக்க பேருந்தின் எஞ்சின் முழுமையாக திருத்தம் செய்யவேண்டும். இதற்கான மூடிய கேள்விக் கூறுவிலையினை 02.12.2024 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு **தலைவர் வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நெடுங்கேணி** என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கலாம் 02.12.2024 பிற்பகல் 2.00 மணிக்கு தங்கள் முன்னிலையில் கேள்விக்கூறுவிலைகள் பரிசீலிக் கப்படும். இத் திருத்தம் தொடர்பான மேலதிக விபரங் களை பெறுவதற்கு நேரடியாகவோ **077 888 9436** இலக்க தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொள்ளவும்.

(cr.43748) (N-1) **தலைவர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ. 7 கோடியை...

நாடளாவிய ரீதியில் தேடப்பட்டு வரும் நிலையில், தற்போது யாழ்ப்பாணத்துக்குள் பதுங்கியுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.
அவர்களைக் கைது செய்வதற்கான, விசாரணைகளை யாழ்ப்பாணம் பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சந்தேகநபர்களை அடையாளம் காணுவதற்கு உதவுமாறு பொதுமக்களின் உதவியையும் பொலிஸார் கோரியுள்ளனர்.
இதன்படி சந்தேகநபர்களை (படத்தில் உள்ளோர்) காண்பவர்கள்



யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜெரோலின் 071 859 1332 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும், உப பொலிஸ் பரிசோதகரின் 077 986 4440 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
(அ-ம-26)

## அதானியின்...

அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானிக்கும் அவருடைய நிறுவனத்தைச் சேர்ந்த மேலும் ஆறு பேருக்கும் அமெரிக்காவில் ஊழல் மோசடிக்காகப் பிடியாணையைப் பிறப்பித்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அமெரிக்காவில் காற்றாலை தொடர்பான முதலீடுகளைப் பெறுவதற்காக இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கினர் என்ற குற்றச்சாட்டு அதானி குழுமத்தினருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது. இலங்கை மதிப்பில் சுமார் 6 ஆயிரத்து 300 கோடி ரூபா இவ்வாறு அதானி குழுமத்தால் லஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இந்த ஒப்பந்தம் மூலம் அவரால் 51ஆயிரம் கோடி ரூபா இலாபம் பெற முடியும் எனவும் அமெரிக்காவின் நியூயோர்க் நகர நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதையடுத்தே, அதானிக்கும் அவருடைய நிறுவனத்தைச் சேர்ந்த 6 பேருக்கும் நியூயோர்க் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
அதானியின் பிரதான வர்த்தகமாக புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி உள்ள நிலையில், உலகின் பல்வேறு நாடுகளில் அவர் மேற்கொண்ட முதலீடுகளின் பின்னணி ஆராயப்பட வேண்டும் என்று இந்தியாவிலும் உலகளவிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இலங்கையின் வடக்கு மாகாணத்தில், குறிப்பாக மன்னார் மற்றும் பூநகரியில் அதானி மேற்கொள்ளும் முதலீடுகளுகள் தொடர்பில் அநுர அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்க முடிவெடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.
2022 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகக் கோத்தாபய இருந்த காலத்தில் இந்த ஒப்பந்தம் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இதை அப்போதைய எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய ஜனாதிபதியுமான அநுரகுமார திஸாநாயக்க கடுமையாக எதிர்த்தார். எனவே, இந்த ஒப்பந்தங்கள் குறித்த பரபரப்புத் தகவல்கள் அடுத்தடுத்த வாரங்களில் வெளிவரலாம் என்றும் எதிர்
...கப்படுகின்றது. (அ-ம-இ)

## மாவீரர்கள்...

மண்ணின் விடியலுக்காக களமாடி ...தாகிய 24 ஆயிரத்து 379 மாவீரர்களின் பெயர்களை உள்ளடக்கிய மாவீரர் நினைவாலயம் நல்லூர் தியாகதீபம் நினைவுத்தூபிக்கு முன்பாக மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் இன்று மாலை 6 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.
மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்த நினைவாலயத்தைத் திறப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் கடும் மழையுடனான காலநிலை காரணமாக நடவடிக்கைகள் பிற்போடப்பட்டன. இதன் தொடர்ச்சியாகவே, இன்று இந்த நினைவாலயம் திறக்கப்படவுள்ளது. (அ-ம-66-26)

## பிரதேச...

கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலாளராகவும், முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் உமாமகள் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளராகவும், கரவெட்டிப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய தயாரூபன் கோப்பாய் பிரதேச செயலாளராகவும், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய மஞ்சுளா சதீசன் கரவெட்டிப் பிரதேச செயலாளராகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (அ-ம-125)

## 300 பவுண்...

இரவு ஒரு மணி தொடக்கம் அதிகாலை 4 மணிக்கு இடைப்பட்ட காலத்தில் அந்தத் திருடன், அரச அதிகாரிகள் மற்றும் வசதிபடைத்தோரின் வீடுகளை இலக்குவைத்து திருட்டில் ஈடுபட்டு வருகின்றான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மூன்றுக்கும் மேற்பட்ட தனிக் குழுக்கள் அமைத்து, இரவு பகலாக புலன் விசாரணைகளை நடத்தியபோதிலும் அந்தத் திருடனை இதுவரை பொலிஸாரால் பிடிக்க முடியாமல் உள்ளமைக்கு முறைப்பாடுகளை வழங்கிய பொதுமக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.
எந்த நவீனத்துவ கருவிகளும் இல்லாமல், சைக்கிளில் வந்து மிகச் சாதாரணமாக அந்த நபர் திருடிச் செல்கின்ற போதிலும், இந்தத் திருட்டுகளை பொலிஸாரால் முறியடிக்க முடியாமல் உள்ளமை பொலிஸாரின் இயலாமையை வெளிப்படுத்துவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-26)

## இந்தியாவிலிருந்து...

பாட்டுக்கு குறுகிய கால தீர்வாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அரிசி இறக்குமதி செய்வதால் விவசாயிகளும், நுகர்வோரும் பாதிக்கப்படபோவதில்லை. இடைத்தரகர்களின் முறையற்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. தேசிய மட்டத்தில் விவசாயத்துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். விவசாயிகளுக்கான நிவாரண கொடுப்பனவு தடையின்றி வழங்கப்படும். அரசியலில் தோல்வியடைந்துள்ள தரப்பினர் வெறும் விமர்சனங்களை மாத்திரம் முன்வைத்துக் கொள்கிறார்கள். போலியான குற்றச்சாட்டுகள் மீது மக்கள் நம்பிக்கை வைக்க மாட்டார்கள். வைக்கவும் வேண்டாம் - என்றார். (அ-ம-இ)

## தேநீர்...

நேற்று இடம்பெற்றுள்ளது. உதயகுமார் சஜிந்தன் (வயது-32) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.
அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-27)

## வெள்ளப்...

பிரிவில் வெள்ள இடரால் இதுவரை 34 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் 175 குடும்பங்களைச் சேர்ந்த 795 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எட்டு வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.
நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்று பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.
தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 573 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 335 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடொன்று சேதமடைந்துள்ளது.
காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 68 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 167 குடும்பங்களைச் சேர்ந்த 569 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 53 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடொன்று சேதமடைந்துள்ளது.
யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 465 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 517 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடொன்று சேதமடைந்துள்ளது. (அ-ம-27)

## விபத்தில்...

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாண கல்லூரியிலிருந்து சங்கரத்தை பக்கமாக 200 மீற்றர் தூரத்தில் பெண் மருத்துவரின் காரும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி இந்த விபத்து சம்பவித்திருந்தது. விபத்தில் படுகாயமடைந்த மகேஷ்வரன் ராம்தாஸ் (வயது-41) என்ற நபர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அவர் நேற்றுமுன்தினம் சிகிச்சையின்போது உயிரிழந்தார். இதையடுத்தே, அந்த மருத்துவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-27)

## டெங்குக்கு...

பருத்தித்துறை நகரப் பகுதியைச் சேர்ந்த சுகாதாரப் பிரிவினராலும் இந்த வழக்குகள் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டன. நேற்றையதினமே அனைத்து வழக்குகளும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு சுற்றிவளைப்புகளின் அடிப்படையில் 30 பேருக்கு எதிராக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. 26 பேர் வழக்குக்கு முன்னிலையாகியிருந்தனர். அவர்கள் அனைவருக்குமாகச் சேர்த்து ஒரு லட்சத்து 95 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## ரூ. 40,000...

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப. தினேஷால் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. எதிராளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இருவருக்குமாக 40 ஆயிரம் ரூபா தண்டம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரகுமாரவின் ஆட்சி: பின்னணியில் அமெரிக்கா

## இந்தியாவின் அரசியல் ஆய்வாளர் எஸ்.டி.முனி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை ஆட்சிக்கு கொண்டுவருவதில் அமெரிக்காவே மிகப்பெரிய இராஜ தந்திர சக்தியாக தமது செல்வாக்கைச் செலுத்தியுள்ளதாக இந்தியாவின் புவிசார் அரசியலில் புகழ்பெற்ற பேராசிரியரும் ஆய்வாளருமான எஸ்.டி.முனி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியிலுள்ள முன்னணி பல்கலைக்கழகமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெற்றுள்ள ஆட்சி மாற்றங்களில் அமெரிக்கா இராஜதந்திர செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. இந்தத் தேர்தலில் அமெரிக்க இராஜதந்திர வட்டாரம் ஆழமான செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. இலங்கையின் அரசியல் பரிணாமத்தின் பின்னணியில் உள்ள சக்தி இயக்கவியலை இந்தச் செல்வாக்கு எடுத்துக்காட்டுகிறது. பலர் ஒப்புக்கொள்ள விரும்பாவிட்டாலும் வெளிநாட்டுச் சக்திகள் இலங்கைத் தீவின் அரசியல் மாற்றங்களில் அதிக செல்வாக்கு செலுத்தியுள்ளன.

அநுரகுமார திஸாநாயக்க புரட்சிகர இலட்சியங்களிலிருந்து மேலும் ஜனநாயகக் கண்ணோட்டத்துக்கு படிப்படியாக மாறி வருகிறார். அநுரகுமார திஸாநாயக்க இப்போது வித்தியாசமான நபராக மாறிக்கொண்டிருக்கிறார்.

இலங்கையின் அரசியல் மாற்றத்தின் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்து ஜே.வி.பி.யின் சித்தாந்தத்தை மறுவடிவமைப்பதில் பிரதான நபராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே திகழ்கிறார்.

ஜே.வி.பி.யை அதன் வன்முறை மனப்பான்மையிலிருந்து வெளியேற்றி ஜனநாயகத்தை நோக்கி பயிற்றுவித்தவர் சந்திரிகாதான்-என்றார். (ச-இ)

# புதிய சபாநாயகருக்கு சஜித் வாழ்த்து

கொழும்பு, நவ, 23

10 ஆவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக நியமிக்கப்பட்ட கலாநிதி அசோக சபுமல் ரன்வலவுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் வைத்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

சபாநாயகராக அவருக்குப் பல பொறுப்புகள் காணப்படுகின்றன. சகல நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், 225 உறுப்பினர்களும் பொதுமக்களுக்கு ஆற்றவேண்டிய சேவைகளில் தங்கள் பங்கை சரியாகச் செய்வதற்கு புதிய சபாநாயகர் பக்கச்சார்பற்றவராகவும் வெளிப்படைத் தன்மையுடனும் கருமம் ஆற்றவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25)

## ஏழாலையில் ஒளிவிழா

யாழ்., நவ. 23

யாழ். ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையின் ஒளிவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல்2 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி சந்திரலதா கனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி மேசி சேவியர்பிரதம விருந்தினராகவும், ஓய்வுநிலை அதிபர் கனகுபாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-66)

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்நகர், சென்ஜோன்ஸ் கல்லூரியை அண்மித்த பகுதிகளில் 5 கி.மீ க்குள் 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளுடன் விசாலமான வளவில் அமைந்துள்ள வீடு வாடகைக்குத் தேவை. தளபாடங்களுடன் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு: WhatsApp 077 364 9897

**கட்டடம் வாடகைக்கு தேவை**

யாழ்நகரை அண்டிய பகுதிகளில் 1500-2000 சதுர அடி கொண்டதும் காமன்ஸ் நடத்துவதற்கு பொருத்தமான சூழல் மற்றும் போக்குவரத்து வசதிகளை கொண்டமைந்ததுமான கட்டடம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: WhatsApp 077 364 9897

**கணக்கியல் உதவியாளர் தேவை**

கொழும்பை தலைமையாகவும் யாழ்ப்பாணத்தில் கிளை நிறுவனத்தை உடைய கம்பனிக்கு கணக்கியல் உதவியாளர் தேவை.

E.mail: bm.jaffna@cwml.edna.lk

077 659 8179

(cs/56728) (N-1)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 8 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்.

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
- தண்ணீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்

பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00

தொடர்புகளுக்கு: 077 468 3354, 077 288 0152

**வேலையாட்கள் தேவை**

கட்டட நிர்மாண வேலைக்கு ஆட்கள் தேவை.

- மேசன்
- கூலி

தொடர்புகளுக்கு:- 076 760 0403

(CS/1907) J-1

**காணி விற்பனைக்கு**

யாழ். சுண்டுக்குழி மோரிஸ் ஒழுங்கையில் 15 அடி - 20 அடியும் பாதை கொண்ட காணிகள் 1.4 பரப்பு, 1.3 பரப்புகளாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

076 156 2983, 077 711 5438

(CS/56735) J-1

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.

- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை 23 லட்சம் ரூபா

தொடர்புகளுக்கு: 076 755 8606, 070 168 3354, 070 668 3354

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 54 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

ஒரு பரப்பின் விலை

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- கடற்கரையை (Beach) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம் - காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: ஜெயம்

077 814 7389

077 986 5457

(CS/1905) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.